**திண்டுக்கல் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்: திருமதி.ப.உஷா,எம்.ஏ.,பி.எட்.,எம்.பில்.**

**ந.க.எண்.5799/அ1/2024 நாள்: .10.2024**

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக்கல்வி - பதவி உயர்வு - திண்டுக்கல் மாவட்டம், வில்பட்டி, அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.சி.பிரபு என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து - ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை: 1. அரசாணை எண்.151 பள்ளிக்கல்வித் (எஸ்.இ1(1)) துறை. நாள்.09.09.2022.

2. திண்டுக்கல் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.2038/அ1/2023. நாள்.20.09.2023.

3. வில்பட்டி, அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரின் கடித ந.க.எண்.19/2024. நாள்:30.09.2024.

*****

பார்வை 2ல் காணும் திண்டுக்கல் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி, திண்டுக்கல் மாவட்டம், விருவீடு, அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பதிவறை எழுத்தராகப் பணிபுரிந்த திரு.சி.பிரபு என்பாருக்கு திண்டுக்கல் மாவட்டம், வில்பட்டி, அரசு உயர்நிலைப்பள்ளிக்கு பதவி உயர்வின் மூலமாக இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3ல் காணும் வில்பட்டி, அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரின் பரிந்துரைக் கடிதத்தின்படி இளநிலை உதவியாளர் திரு.சி.பிரபு என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணியேற்ற நாளான 22.09.2023 மு.ப. முதல் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணிவரன் முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி / பணியாற்றும் பள்ளி / அலுவலகம் | இளநிலை உதவியாளர் பதவியில் நியமன நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.சி.பிரபு<br>இளநிலை உதவியாளர்.<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>வில்பட்டி.<br>திண்டுக்கல் மாவட்டம் | 22.09.2023<br>முற்பகல் | 22.09.2023<br>முற்பகல் |

Scanned with CamScanner

**நிபந்தனைகள்:**

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து மூன்றாண்டுகள் பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.
2. பவானி சாகர் அடிப்படைப் பயிற்சி மற்றும் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.
3. தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.
4. பணிவரன்முறை செய்த விவரத்தினை சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளமாறு சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : அசல் பணிப்பதிவேடு.

17/10/21

முதன்மைக்கல்வி அலுவலர்
திண்டுக்கல்

பெறுநர்:

1. தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, வில்பட்டி.
2. சார்ந்தபணியாளர் ( உரிய வழியாக).

Scanned with CamScanner